2025-ம் ஆண்டு வாக்குத்தத்தம்

நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை. யோசுவா 1:5

# பரிசுத்த பர்வதம்

## செய்தி மலர்

நவம்பர் மாத இதழ்

**என் கிருபை உன்னை விட்டு விலகாமலும், என் சமாதானத்தின் உடன்படிக்கை நிலைபெயராமலும் இருக்கும்.**
**ஏசா 54:10**

**YET MY UNFAILING LOVE FOR YOU WILL NOT BE SHAKEN NOR MY COVENANT OF PEACE BE REMOVED.**
Isaiah 54:10

Rev. Dr. J. சாமுவேல் ஜெபராஜ்
Pr. S. காலேப் ராபர்ட் M.Div.,

| HMSM | XXVII | NOV |

# சபையின் இலக்குகள் – 2025

1. மொத்த விசுவாசிகளின் எண்ணிக்கை 5000
2. மொத்த பராமரிப்புக்குழுக்களின் எண்ணிக்கை 300
3. மொத்தம் 50 மிஷனெரிகளை வட இந்தியாவில் தாங்குதல்
4. மிஷனெரிகளுக்கு மாதம் ரூ.3,00,000/- (3 லட்சம்) அனுப்புதல்
5. சபைக்கு 2 ஏக்கர் நிலம் வாங்குதல் (Revival Centre)
6. கிளை சபை 2 ஆரம்பித்தல்
7. சபைக்கு 2 வேன் வாங்குதல் (ரூ 20 லட்டி)
8. வட இந்தியாவில் 2 ஆலயங்கள் கட்டுதல்
9. முழங்கால் ஜெப யுத்த வீரர்கள் 500 பேரை எழுப்புதல்
10. ஞானஸ்நானம் 200 நபர்களுக்கு
11. முழு நேர ஊழியர்கள் 2, மிஷனெரிகள் 2 எழுப்புதல்
12. புதுக்கோட்டையும் அதை சுற்றியுள்ள 65 கிராமங்களிலிருந்து ஜனங்கள் ஆராதனைக்கு வர
13. மீனாட்சிபட்டியில் ஆலயம் கட்டுதல்
14. புதுக்கோட்டையும் அதை சுற்றியுள்ள 65 கிராமங்களில் ஜெப யுத்தம் 2 முறை செய்தல்
15. தலைவர்களுக்கான ஊழிய பயிற்சி 2 நடத்துதல்
16. அதிகாலை ஆராதனைக்கு சபையில் 250, Online இல் 1000 நபர்களை கூட்டி சேர்த்தல்
17. சபையிலிருந்து வட இந்தியாவுக்கு மிஷன் பிரயாணம் செய்தல் (குழுவாக)
18. சபையின் கல்லறைத் தோட்டத்தை விரிவாக்கம் செய்தல்
19. V.B.S சிறப்பாக 150 இடங்களில் நடத்துதல்
20. சிறுவர் முகாம் 1
21. வாலிபர் முகாம் 1
22. பெண்கள் முகாம் 1
23. புருஷர்கள் முகாம் 1
24. மாதந்தோறும் நடைபெற்று வருகிற அமாவாசை ஜெபத்தில் 120 பேர் கூடுதல்

# நமது சபையின் 15 வகை ஊழியங்கள்

1. கிராம ஊழியம்
2. பத்திரிக்கை ஊழியம்
3. மிஷனெரி ஊழியம்
4. T.V ஊழியம்
5. மருத்துவமனை ஊழியம்
6. ஜெப நடை ஊழியம்
7. சிறுவர்கள் ஊழியம்
8. பின்தொடர் ஊழியம்
9. நேசக்கரங்கள் ஊழியம்
10. ஜெப யுத்த ஊழியம்
11. மாணவர்கள் மத்தியில் ஊழியம்
12. பராமரிப்புக்குழு ஊழியம்
13. ஆலோசனை ஊழியம்
14. மீடியா ஊழியம்
15. C.O.C ஊழியம்.

# இந்த மாத வாக்குத்தத்தம்

## என் கிருபை உன்னை விட்டு விலகாமலும், என் சமாதானத்தின் உடன்படிக்கை நிலைபெயராமலும் இருக்கும்.
## ஏசா 54:10

### ஆசிரியரிடமிருந்து...

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். இந்த 11 வது மாதம் தேவன் உங்களையும் உங்கள் குடும்பத்தையும் பாதுகாத்து வழிநடத்துவாராக.

10 மாதங்கள் ஆச்சரியமாக நடத்தின தேவனை துதியுங்கள். பெற்ற நன்மைகளுக்காக நன்றியுள்ளவர்களாய் இருங்கள்.

இந்த மாதம் தேவ கிருபையை அதிகமாய் பெற்றுக் கொள்ளுங்கள். உங்கள் மேல் இருக்கிற கிருபையை பாதுகாத்துக் கொள்ளுங்கள். இந்த நாட்களில் அநேகர் தாங்கள் பெற்ற கிருபையை போக்கடிக்கிறார்கள்.
1. அதிகமாய் தேவனை தேடுங்கள்.
2. கர்த்தருக்கு முன்பாக தாழ்மைப்படுங்கள்.
3. எப்பொழுதும் ஸ்தோத்திரங்களை கர்த்தருக்கு செலுத்துங்கள்.

கிருபை மேல் கிருபை பெற்று இந்த மாதம் மகிழ்ச்சியுடன் வாழுங்கள்.



**தேவன் உங்களையும் உங்கள் குடும்பத்தையும் ஆசீர்வதிப்பாராக...**

**Rev. Dr. J. Samuel Jebaraj**

ஆண்கள் பகுதி

# விதைப்பும் அறுப்பும்

பெலிஸ்தர் தேசத்தில் கடுமையான பஞ்சநாட்கள். ஈசாக்கு கையில் இருக்கும் கொஞ்சம் விதை தானியத்தை விசுவாசத்தோடு விதைத்தான். கர்த்தர் அவனை ஆசீர்வதித்தார். அவன் நூறு மடங்கு பலன் பெற்றான். விதைப்பையும் அறுப்பையும் குறித்து வேதம் கூறும் ஆலோசனைகளைக் காண்போம்.

விதைப்பும் அறுப்பும் மாறாத பிரமாணம்; விதைக்கவே தேவன் விதையை தருகிறார்; விதைத்தால் மட்டுமே தேவன் விளையச்செய்வார்; பலனை பெற முடியும்.

**எங்கு விதைக்க வேண்டும்?**

முதலாவது தேவசமூகத்தில் விதையுங்கள். உன் பொருளாலும், உன் எல்லா விளைவின் முதற்பலனாலும் கர்த்தரைக் கனம் பண்ணு (நீதி 3:9). உங்கள் தசமபாக காணிக்கைகளை நீங்கள் உங்கள் சபைக்கே செலுத்துங்கள் (1 கொரி 3:6-9; 9:11) என்ற வசனத்தின்படி உற்சாகமாய் கொடுங்கள். ஏனென்றால் உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்-(2 கொரி 9:7)

உங்கள் பெற்றோருக்கு உதவி செய்யுங்கள். உன் தேவனாகிய கர்த்தர் உனக்கு கொடுக்கிற தேசத்திலே உன் நாட்கள் நீடித்திருப்பதற்கு, உன் தகப்பனையும் உன் தாயையும் கனம் பண்ணுவாயாக.(யாத் 20:12)

சமுதாயத்தில் உள்ள ஏழைகளுக்கு உதவி செய்யுங்கள். நீங்கள் தேசத்தின் பயிரை அறுக்கும் போது, உன் வயலின் ஓரத்திலிருக்கிறதைத் தீர அறுக்காமலும், சிந்திக்கிடக்கிற கதிர்களைப் பொறுக்காமலும், (லேவி 19:9) அவைகளை எளியவனுக்கும் பரதேசிக்கும் விட்டுவிடுவாயாக (லேவி 19:10; நீதி 19:17; கலா 2:10)

அரசாங்கத்திற்கு தவறாமல் உங்கள் வரியை செலுத்துங்கள். மாற்கு 12:17இல் இயேசு: இராயனுடையதை இராயனுக்கும், தேவனுடையதைத் தேவனுக்கும் செலுத்துங்கள் என்றார்.

**விதைப்பின் பலன்**:

விதைக்கிறவர்களை கர்த்தர் வானத்தின் பலகணிகளைத் திறந்து ஆசீர்வதிப்பார்(மல்கி 3:10). விதைக்கிறவனுக்கு விதையையும், புசிக்கிறதற்கு ஆகாரத்தையும் அளிக்கிறவர் உங்களுக்கு விதையை அளித்து, அதைப் பெருகப்பண்ணி, உங்கள் நீதியின் விளைச்சலை வர்த்திக்கச்செய்வார் (2 கொரி 9:10)

முடிந்தளவு சம்பாதி, முடிந்தளவு சேமி, முடிந்தளவு கொடு என்பதே ஜான் வெஸ்லி என்ற மாபெரும் ஊழியரின் அறைகூவல். உன் ஆகாரத்தைத் தண்ணீர்கள் மேல் போடு; அநேக நாட்களுக்குப் பின்பு அதின் பலனைக் காண்பாய் (பிரசங்கி11:1) என்ற வசனத்தின்படி தேவராஜ்ஜியத்திற்காக விசுவாசத்தோடு விதையுங்கள். தேவன் சம்பூரண ஆசீர்வாதங்களால் உங்களை செழிக்கச் செய்வார்.


புருஷர் ஐக்கிய கூட்டம்

திங்கட்கிழமை தோறும்

இரவு 8.00 -8.45 மணி வரை

இணைந்து ஜெபிக்க யாவரையும் அன்புடன் அழைக்கிறோம்..

# தேவனுடைய சித்தம்

பெண்கள் பகுதி

Mrs. பெர்சியாள் ஜெபராஜ்

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் பெண்களாகிய உங்களுக்கு என் அன்பின் வாழ்த்துக்கள். சுகமாயிருக்கிறீர்களா! பெண்களாகிய நாம் அடிக்கடி கூறும் வார்த்தைகளில் ஒன்று ஆண்டவர் அவருடைய சித்தத்தின்படி நடத்துவார் அல்லது நிறைவேற்றுவார் என்று கூறும் நாம் அவருடைய சித்தம் என்ன என அறிந்திருக்கிறோமா? என்றால் சந்தேகம் தான். இந்த இதழில் ஒரு சிலதை அறிந்து கொள்வோமா...

**1) 1 தெச 4:18**

எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரஞ் செய்யுங்கள். அப்படிச் செய்வதே கிறிஸ்து இயேசுவுக்குள் உங்களைக் குறித்துத் தேவனுடைய சித்தமாயிருக்கிறது. ஆம், பெண்களே இந்த வசனத்தின்படி செய்வோமானால், கவலை, சோர்வு, துக்கத்திற்கு இடமே இல்லை. எதைச் செய்தாலும் கர்த்தர் நன்மைக்கென்றே செய்வார் என விசுவாசிப்பவர்களால் மாத்திரமே எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரம் செய்ய முடியும்.இதுவே தேவனுடைய சித்தம். நீங்கள் எப்படி?

**2) 1 பேதுரு 2:15**

நீங்கள் நன்மை செய்கிறதினாலே புத்தியீன மனுஷருடைய அறியாமையை அடக்குவது தேவனுடைய சித்தமாயிருக்கிறது. 1 பேதுரு 3:17ல் தீமை செய்து பாடநுபவிப்பதிலும், தேவனுக்குச் சித்தமானால், நன்மை செய்து பாடநுபவிப்பதே மேன்மையாயிருக்கும். ஆம் பெண்களே! நாம் ஆராதிக்கும் தேவன் நன்மை செய்கிறவர். நாம் நன்மையே செய்ய வேண்டும் என சித்தம் உடையவர். நன்மை செய்தால் மேன்மையும் உண்டு, சில சமயம் பாடும் உண்டு. ஆனாலும் நன்மை செய்வதில் சோர்ந்து போகாமலிருப்போமாக. தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுவோம்.

**3) 1 தெச 4:3**

நீங்கள் பரிசுத்தமுள்ளவர்களாக வேண்டுமென்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது. அந்தப்படி, நீங்கள் வேசி மார்க்கத்துக்கு விலகியிருந்து, முதலாவது, தேவன் நம்மை அசுத்தத்திற்கு அல்ல, பரிசுத்தத்திற்கே அழைத்திருக்கிறார். அவர் பரிசுத்தர் நாமும் நம் சரீரத்தை பரிசுத்தமாய் காக்க வேண்டும். அழிக்கவோ, கெடுக்கவோ உரிமை இல்லை. இரண்டாவது, நம் தேவனைத் தவிர, எதன் மேலும் நம்பிக்கையோ, தொழுது கொள்ளவோ கூடாது. அவர் ஒருவரே தொழுகைக்கும் வணக்கத்திற்கும் உரியவர். வேசிமார்க்கம் வந்துவிடக் கூடாது. பெண்களே! கவனம் தேவை.

4) 1தீமோ 2:4

எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார். ஆம், பெண்களே! எல்லா மனுஷருடைய இரட்சிப்புக்காக ஜெபிக்கவும், சுவிசேஷம் அறிவிப்பதும் நம்மேல் விழுந்த கடமை. அவருடைய சித்தத்தை, அறிந்திருக்கிற நாம் செயல்படுத்துகிறோமா! சிந்திப்போம். செயல்படுவோம்.



பெண்கள் ஆராதனை

செவ்வாய் தோறும் காலை 10:00 -11:30 மணி வரை நமது சபையில் வைத்து நடைபெறுகிறது.

LIVE STREAMING




# போர் குணம் வேண்டும்

**பொறுப்பு:** Pr. **காலேப் ராபர்ட்**
**உதவி:** Bro. **பிலிப்**

தேவசாயலில் படைக்கப்பட்ட, அவர் பிள்ளைகளுக்கு, இயேசு கிறிஸ்துவின் நாமத்தில், என் அன்பின் வாழ்த்துக்கள்.

நாம் கடந்து போய்க்கொண்டிருக்கும் இந்த உலகப்பாதை, அநேக நேரங்களில் நம்மை நெருக்கவே செய்கிறது. கொஞ்ச நேரம் சாய்ந்து "ஹப்பாடா" என்று மூச்சு விடுவதற்குள், "இந்தா வந்துட்டேன், அடுத்த பிரச்சனையை தூக்கிட்டு" அப்படினு பிசாசு வந்துவிடுகிறான். Gap இல்லாம, shift மாத்தி மாத்தி, மாங்கு மாங்கு' னு வேல பாக்குறான்.

ரோமர் 8:29– தேவன் அவர்களைத் தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன்குறித்திருக்கிறார்.

ரோமர் 8:31– தேவன் நம்முடைய பட்சத்திலிருந்தால் நமக்கு விரோதமாயிருப்பவன் யார்?

தேவன் நம்மைக் குறித்து என்ன சொல்லிருக்காருனு தெரிஞ்சும் எவ்வளவு கஷ்டப்படுறான் பாருங்களேன். என்ன ஒரு போராட்ட குணம் இல்ல? அவனுக்கு இருக்கிற போர்குணம் கூட நம்ம கிட்ட பல நேரம் இருக்கிறது இல்ல. ஒரு ராஜா வீட்டு பிள்ளை யுத்தம் செய்ய பழக வேண்டாமா? நாம் யுத்தம் செய்யுறோம், மனுஷங்களுக்கு எதிரா செய்யுறோம். பிசாசு தெளிவான ஆள். மனுஷங்கள முன்னேனைத்து, அதுல நம்ம நேரம், energy எல்லாம் waste ஆக்கிட்டு, அப்புறம் நம்மை வொட்டலம் கட்டிக்கொன்டு போயிடுறான்.

பல்வேறு யுக்திகளை கைவசம் வெச்சிட்டு சுத்துறான். நாம என்ன பண்ணுகிறோம்? ஒன்று, இரண்டு விஷயங்கள் செய்தால் போதும் என்று வேடிக்கைப் பார்க்கிறோம். ஜெபம், வசனம், உபவாசம், phone தேவைக்கு மட்டும் use பண்ணுதல், social media தேவனை அறியாத ஆட்களை unfollow செய்தல், வேலையில் அறிவை வளர்த்துக்கொள்ள,
தொழிலில் முன்னேற கடினமாக உழைத்தல், குடும்பத்துக்கு நேரம் செலவிடுதல், உடல் நலம், உணவு, உடற்பயிற்சி–இப்படி இது எல்லாவற்றையும் மாற்றி மாற்றியும், தொடர்ச்சியாகவும் செய்யணும். ஆவி, ஆத்துமா, சரீரம்– மூன்றும் தேவன் படைத்தது தானே. மூன்றின் தேவையையும் நாம் சந்திக்கணும். ஒன்றும் வேலை செய்கிறதா தெரியலையா, அடுத்தடுத்து பண்ணு. ஒரே இடத்தில் இருந்து இது என்னடா நகரவே முடியவில்லை என புலம்பாதீர்கள். புலம்பல் எரிச்சலை உண்டாக்கும். எரிச்சல் சோர்வடையச் செய்யும். பின்னர் ஜெபம், வேதவாசிப்பு பாதிக்கும், வழிவிலக நேரிடும்.

நாம் சில விஷயங்களை புடிச்சுகிட்டு இது ஏன் நடக்கவே இல்லை என்று அதிலேயே கவனம் செலுத்துறோம். வேலையிடத்திலே, உலகத்திலே, உறவுகளிலே பல்வேறு போராட்டம் இருந்துகொண்டே தான் இருக்கும். இது போர்க்களம். அடுத்தது என்ன –அதை மட்டுமே தான் பேசணும். குறை சொல்லி, நடந்ததை மாற்றிவிட்டேன் என்று சொல்ல உலகத்தில் ஒருவனும் இல்லை.

ஜெயம் ஏற்கனவே எழுதப்பட்டிருக்கிறது. போராடுவதை மட்டும் விட்டுவிடாதீர்கள்.

# நன்மையானதை முயன்று தேடு

பொறுப்பு: Mrs. லீலிதனராஜ்

## அன்பான சிறுபிள்ளைகள் அனைவருக்கும் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள்



டாக்டர் சந்திரசேகர் என்பவர் இந்திய நாட்டைச் சேர்ந்த அறிவியல் விஞ்ஞானி. 1947 ல் சிகாகோ பல்கலைக்கழகத்தில் நட்சத்திரத்திரங்களைப் பற்றிய ஆய்வைக்குறித்து ஒரு கருத்தரங்கு நடத்தும்படிக் கேட்டுக் கொள்ளப்பட்டார். அந்த சமயத்தில் அவர் விஸ்காசின் என்ற நகரத்தில் வசித்து வந்தார். யார்க்ஸ் என்ற வானியல் ஆய்வு மையத்தில் பணியாற்றி வந்தார். அவர் இருக்கும் இடத்திலிருந்து சிகாகோ நகரம் நூறு மைல் தொலைவிலிருந்தாலும் கடும் குளிரில் பயணம் செய்ய வேண்டிருந்ததாலும் அதிக உற்சாகத்துடன் அந்த கருத்தரங்கை நடத்த சம்மதித்தார்.

எதிர்பார்த்த அளவுக்கு அந்தக் கருத்தரங்கிற்கு மாணவர்கள் எண்ணிக்கை பதிவாகவில்லை. சீனாவைச் சேர்ந்த சென்கிங் யாங் மற்றும் சாக்டால் என்ற இருவர் மட்டுமே பெயர் கொடுத்திருந்தார்கள். அத்துறையிலிருந்த மற்றவர்களோ டாக்டர் சந்திரசேகர் அந்த கோர்ஸை ரத்து செய்துவிடுவார் என்று எண்ணினார். ஆனால் அவரோ அந்த இரு மாணவர்களுக்கும் சிறந்த முறையில் பாடம் நடத்துவதை தொடர்ந்தார். இருமாணவர்களும் அவருடைய முயற்சிக்கு ஒத்துழைத்தனர். பத்து ஆண்டுகள் கழித்து அதாவது 1957ல் இருவரும் இயற்பியலுக்கான நோபல் பரிசு பெற்றனர். டாக்டர் சந்திர சேகர் அதே விருதை 1983ல் பெற்றார்.

அன்பான சிறுபிள்ளைகளே! முடிவும் அதற்குரிய வழிகளும் ஒன்றுக்கொன்று சேராதவைகள் அல்ல. நல்ல காரியங்களை அடைய நல்ல வழிகளை தேர்ந்தெடுத்தால் அதன் முடிவை மக்கள் புகழ்வார்கள். எனவே நல்ல முடிவை எடுத்து உங்கள் படிப்பிலும் ஆவிக்குரிய வாழ்க்கையிலும் வாழ்ந்து சிறக்க வாழ்த்துகிறேன்.

**மனப்பாடவசனம்: நீதிமொழிகள் 20:7**

**நீதிமான் தன் உத்தமத்திலே நடக்கிறான். அவனுக்குப்பிறகு அவன் பிள்ளைகளும் பாக்கியவான்களாய் இருப்பார்கள்.**

சிறுவர் ஊழியப் பொறுப்பாளர்கள் & நடைபெறும் இடங்களைப் பற்றி தெரிந்திக்கொள்ள QR ஐ Scan செய்யவும்.

**CHILDREN'S TIME**

வாரந்தோறும் மாலை 5:00 மணி அளவில் சிறுவர் நேரம் நமது சபையின் யூ டியூப் சேனலில் ஒளிபரப்பப்படும்.

# நமது சபை தாங்கும் ராஜஸ்தான், குஜராத், டெல்லி, பஞ்சாப், அசாம் ஊழியங்கள்.

நமது சபை தாங்கும் 38 மிஷனெரிகளும், 4 மிஷன் பிள்ளைகளுக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள், உற்சாகமாய் கொடுங்கள்.

**மாதம் தேவை: ரூ.1,96,100** பொறுப்பு: Bro. அர்னால்டு


**Pr. Daniel Babu**
Gujarath


**Pr. Stephen Rathod**
Rajasthan


**Pr. Mandeep kidhay**
Moga


**Pr. Chaman Masih**
Ablowal


**Pr. Binu Vijayan**
Tripuri


**Pr. SawarGill**
Gurdaspur


**Pr. Peter Masig**
Taran Taram


**Pr. Sandeep Singh**
Chunnai Kalan


**Pr. Inderjit Singh**
Mohali


**Pr. Prasenjit Basumatary**
Assam


**Pr. Karthick**
Chandigarh


**Pr. Gurdial Singh**
Dehriwal Droga


**Pr. Rajkumar**
Kurali


**Pr. Rajesh**
Mahatpur


**Pr. Simson**
Karnataka


**Pr. Happy Masih**
Sarspur


**Pr. Jirma Lal**
Bazara


**Pr. Caleb**
Delhi


**Pr. Heral Kaddara**
Rajasthan


**Pr. Arionp Kumar**
Ajimar


**Bro.Sam Guna Seelan**
Sharing Love Mission


**Pr. Kamal Deep**
Punjab


**Pr. Godson Joy**
Punjab


**Pr. Harjeet Kaur**
Nawashar


**Pr. Jaswinder Kumar**
Delhi


**Pr. Pritam Singh**
Rajasthan


**Pr. Sonu**
Makhu


**Pr. Patras Masih**
Feruyzepur


**Pr.Dhananjay Nokman**
Assam


**Pr. Jinod Rabha**
Assam


**Bro. Prakash**
Shalom Charity Trust


**Sis. Sugantha**
Shalom Charity Trust


**Bro. Joshua Bhuriya**
Shalom Charity Trust


**Sis. Karuna K. Damor**
Madhya Pradhesh

**மிஷனெரி ஊழியத்திற்கு உங்களால் இயன்றதை அனுப்பி தாங்கலாம்.**

*எங்களது வங்கி கணக்கு எண்:*

| | |
|---|---|
| Name | : Assembly of God Pudukottai |
| Bank | : TMB |
| A/c No. | : 035100140450007 |
| IFSC Code | : TMBL0000035 |
| Branch | : Pudukottai, Tuticorin. |

# பராமரிப்புக் குழு

| டிவிஷன் எண் | டிவிஷன் தலைவர் | பராமரிப்புக்குழுக்கள் எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | Bro. **வேதமுத்து,** Sis. **கவிதா** | 16 |
| 02 | Bro. **தனராஜ்,** Sis. **எஸ்தர்** | 18 |
| 03 | Bro. **அற்புதராஜ்,** Bro. **யாக்கோபு** | 19 |
| 04 | Sis. **வசந்தா ,** Sis. **கோயில் செல்வி** | 24 |
| 05 | Bro. **ரூபன்,** Sis. **பேன்சி** | 16 |
| 06 | Bro. **சாமுவேல் பீட்டர்,** Bro. **பால்** | 14 |
| 07 | Sis. **ஜெயா ,** Sis.**அமுதா** | 11 |
| 08 | Sis. **மேரி செல்வி,** Sis. **தேன்மொழி** | 15 |
| 09 | Pr. **ராஜன்,** Sis. **காஞ்சனா** | 16 |
| 10 | Sis. **சாராள் ஜெயராணி,** Bro. **சதீஷ்** | 12 |
| 11 | Sis. **பொன்செல்வி,** Bro. **அலைக்ஸ்** | 19 |
| 12 | Bro. **ஜெபஞான குணசிங்,** Bro. **இம்மானுவேல்** | 13 |

**உங்கள் பகுதியில் செயல்படும் பராமரிப்புக் குழுக்கள் பற்றியும் நடைபெறும் நேரத்தை பற்றியும் தெரிந்து கொள்ள கொடுக்கப்பட்டுள்ள QR Code ஐ Scan செய்யவும்.**

# சாட்சிகள்

● நான் பார்த்த வேலை போய்விட்டது, வேலையும் கிடைக்கவில்லை. தனியாக தொழில் தொடங்க வேண்டும் என்று கண்ணீரோடு ஜெபித்து ஜெப விண்ணப்ப பெட்டியில் எழுதிப்போட்டேன். அற்புதமாக இயேசு தொழில் தொடங்க கிருபை செய்தார். என் மகள் படிப்பிற்காகவும் ஜெபித்தேன். அவள் ஆசைப்பட்டபடி மேற்படிப்பு தொடர தேவன் கிருபை செய்தார். என் வேண்டுதலின்படி எனக்கு கொடுத்த என் தேவாதி தேவனுக்கு ஸ்தோத்திரம்.

– Sis. ஹெப்சிபா, அய்யனடைப்பு

---

● கர்த்தருடைய நாமத்திற்கு ஸ்தோத்திரம், 2023 ஆம் ஆண்டு நான் வேலை செய்த இடத்தில் ரொம்ப பிரச்சனை. வேலையை விட்டு நின்றுவிட்டேன். வேலைக்காக ஜெபித்தேன், 2024ல் திருநெல்வேலியில் வேலை கிடைத்தது. இந்த வருடம் உபவாச ஜெபத்தில் இரண்டு இடத்தில் வேலை வேணும் என்று ஜெபித்தேன். முன்பு வேலை செய்த இடத்திலிருந்து அவர்களே என்னை அழைத்து, நல்ல சம்பளத்தோடு 6 மணி நேரம் மட்டும் வேலையை கொடுத்தார்கள். இப்போழுது நான் மாதம் ரூ.60,000 சம்பளம் வாங்குகிறேன். என் ஜெபத்தைக் கேட்டு பொருளாதாரத்தில் ஒரு பெரிய வளர்ச்சியை தந்த தேவனுக்கு ஸ்தோத்திரம். எனக்காக ஜெபித்த பாஸ்டர் மற்றும் பாஸ்டர் அம்மாவிற்கு நன்றி...

– Sis. முத்துமாலை

---

● கர்த்தருக்கு ஸ்தோத்திரம், இந்த ஆண்டின் பெண்கள் முகாமில் நான் கர்ப்பத்தின் கனிக்காக ஜெபித்தேன். அந்த மாதமே கர்த்தர் எனக்கு கர்ப்பத்தின் கனியை தந்து ஆசீர்வதித்தார்.எங்களை ஆசீர்வதித்த தேவனுக்கு நன்றி.

– Sis. சந்தியா, கூட்டாம்புளி

---

● என்னை சாட்சியாக நிறுத்தின தேவனுக்கு கோடான கோடி ஸ்தோத்திரம், நானும் என் கணவரும் 6 மாதமாக குழந்தைக்காக ஜெபித்து வந்தோம். கடந்த மாதம் ஞாயிற்றுக்கிழமை இருவரும் ஞானஸ்நானம் எடுப்பதாகவும் சாட்சி சொல்வதாகவும் பொருத்தனை செய்தோம். வீட்டிற்கு வந்து *pregnency kit* செக் பண்ணும் போது *positive* என காண்பித்தது. கர்த்தருக்கு கோடான கோடி நன்றிகள்.

– Mrs. மரிய அனிஷா அருண்


A.G திருமண இணைப்பு ஊழியம்

1. சனி மற்றும் ஞாயிறு தவிர மற்ற நாட்களில் காலை 10:00–12:30 மணி வரை சபை அலுவலகத்திற்கு நேரில் வரலாம்.
2. தற்போது எடுக்கப்பட்ட முழு உருவ புகைப்படம் 4 தேவை.
3. அலுவலகத்திலுள்ள விண்ணப்ப படிவத்தை நிரப்பித்தர வேண்டும்.
4. விண்ணப்பிப்பவர் இரட்சிக்கப்பட்டு, தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் பெற்றிருக்க வேண்டும்.
5. பதிவு கட்டணம் ரூ.10/– மட்டும்.

மேலும் விவரங்களுக்கு எங்களது அலுவலகத்தை தொடர்பு கொள்ளுங்கள்.

செல்: 9345712349 விண்ணப்ப படிவம் QR Code ல் இணைக்கப்பட்டுள்ளது.



அமாவாசை ஜெபம்

17 நவம்பர் திங்கள்

செய்வினைகள், பில்லிசூனியம், அசுத்த ஆவிகளின் போராட்டங்கள் மேற்கொள்ள ஜெபிக்க வாருங்கள்.

இடம்: கெத்சமனே பிரேயர் பார்க் (தேரி)

நேரம்: இரவு 10.00–12.30 மணி வரை

13 வயதிற்க்கு மேல் உள்ள வாலிபர்கள் மற்றும் ஆண்கள் பங்கு பெறலாம்.

வாருங்கள் ஆசீர்வதிக்கப்படுங்கள்...

பொறுப்பு: Pr. ராஜன் (உதவி ஊழியர்)

LOCATION

# குறுக்கெழுத்துப் போட்டி

Sis. சாந்தா

**நவம்பர்-2025**
**யோவான் 12 - 21 அதிகாரம் வரை**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | 1 | 2 | | |
| | | | | | 3 | 4 |
| 5 | | 6 | | | | |
| | | | | | 7 | |
| | 8 | 9 | | | 10 | |
| | | | | 11 | | |
| 12 | | | | | | 13 |

**வலமிருந்து இடம்**

01. இயேசு, பிதாவுடைய எதை அவர்களுக்குத் தெரியப்படுத்தினேன், இன்னமும் தெரியப்படுத்துவேன் என்றார்?
03. கேளுங்கள், உங்கள் எது நிறைவாயிருக்கும்படி பெற்றுக்கொள்வீர்கள் என்றார்?
07. யூதாஸ்காரியோத்து; இந்தத் தைலத்தை எத்தனைப் பணத்துக்கு விற்கலாம் என்றான்?
11. நான் உங்களை உலகத்திலிருந்து தெரிந்து கொண்டபடியினால் எது உங்களைப் பகைக்கிறது என்றான்?
13. என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனும் எதில் இராதபடிக்கு நான் உலகில் ஒளியாக வந்தேன் என்றார்?

**இடமிருந்து வலம்**

02. இயேசு அவளை, மரியாளே என்றவுடன், அவள் அவரை எப்படி அழைத்தாள்?
06. இயேசுவிடம், பிதாவை எங்களுக்குக் காண்பியும் என்றது யார்?
09. இயேசுவைப் பிடித்து, கட்டி முதலாவது யாரிடம் கொண்டு போனார்கள்?
12. எதில் சுற்றியிருந்த சீலை மட்டும் தனியே வைத்திருந்ததைக் கண்டான்?

**மேலிருந்து கீழ்**

04. எத்தனை நாளைக்குப் பின்பு, சீஷர்கள் வீட்டுக்குள்ளே இருக்கும் போது, இயேசு வந்து உங்களுக்குச் சமாதானம் என்றார்?
05. பிலாத்து எப்படி சொல்லப்பட்ட இடத்தில் நியாயாசனத்தின் மேல் உட்கார்ந்தான்?
10. பிரதான ஆசாரியர்கள் யாரையும் கொலை செய்ய ஆலோசனை பண்ணினார்கள்?

**கீழிருந்து மேல்**

05. இயேசு எந்தக் குட்டியைக் கண்டு அதின் மேல் ஏறிபோனார்?
08. மரியாள் விலையேறப் பெற்ற களங்கமில்லாத எந்த தைலத்தை இயேசுவின் பாதத்தில் பூசினாள்?
13. இயேசுவின் சரீரம் வைக்கப்பட்ட இடத்தில் எத்தனைத் தூதர்கள் உட்கார்ந்திருந்தார்கள்?

**முக்கிய குறிப்பு:**

உங்களுடைய பதில்களை கொடுக்கப்பட்டுள்ள கட்டத்தில் நிரப்பி,
வசன இருப்பிடத்தையும் எழுதி அனுப்பவும்.
20ம் தேதிக்குள் தபால் மூலம் அனுப்பவும் அல்லது அலுவலகத்தில் நேரடியாக கொடுக்கவும்

**பரிசு பெறும் 3 நபர்கள்**

1. Sis. மீனா சாரா, செல்வம்சிட்டி
2. Sis. செல்லம்மாள், புதுக்கோட்டை
3. Bro. மணிகண்டன், காலாங்கரை

## எங்களது வங்கி கணக்கு எண்:

இந்த செய்தி மலர் ஊழியத்திற்க்காக ஜெபியுங்கள். இதன் தேவை சந்திக்கப்பட காணிக்கை அனுப்பலாம்,

**Name** : J. Samuel Jebaraj
**Bank** : ICICI - Bank
**A/c No.** : 613901506045
**IFC Code** : ICIC 0006139
**Branch** : Tuticorin

UPI ID:
prjsjebaraj@okaxis

## இந்த மாதம் போதகர் செல்லும் ஊழியங்கள்:

04.11.2025 - செவ்வாய்க்கிழமை
ஊழியர்கள் ஐக்கிய கூடுகை - திருநெல்வேலி

07.11.2025 - வெள்ளிக்கிழமை
முழு இரவு ஜெபம் - திருசெந்தூர் தாலுகா

12,13.11.2025 - புதன், வியாழன்
ஜெப முகாம் - சீர்காழி

14.11.2025 - வெள்ளிக்கிழமை
முழு இரவு ஜெபம் - எட்டையாபுரம்

17.11.2025 - திங்கட்கிழமை
அமாவாசை ஜெபம் - பிரையர் பார்க்

18.11.2025 - செவ்வாய்க்கிழமை
மாவட்ட முழு இரவு ஜெபம் - தூத்துக்குடி

19,20.11.2025 - புதன், வியாழன்
போதகர்கள் முகாம் -விருதுநகர்

28.11.2025 - வெள்ளிக்கிழமை
முழு இரவு ஜெபம் - கோவில்பட்டி

## ஞாயிறு தோறும் 5 ஆராதனைகள்

1 - வது ஆராதனை - காலை 06:00-07:30

2 - வது ஆராதனை - காலை 08:30-10:00

3 - வது ஆராதனை - காலை 11:00-12:30

4 - வது ஆராதனை - மாலை 05:00-06:00 ஹிந்தி

5 - வது ஆராதனை - மாலை 06.30-08:00

**உபவாச ஜெபம்**

சனிதோறும் காலை 10:00 - 12:30

**பெண்கள் ஆராதனை**

செவ்வாய்தோறும் காலை 10:00 - 11:30

**அதிகாலை ஆராதனை**

தினந்தோறும் காலை 6:00 - 6:40

**அமாவாசை ஜெபம்**

அமாவாசை இரவு 10:00 - 12:30

**சபை கூடிவருதலைச் சிலர் விட்டுவிடுகிறதுபோல நாமும் விட்டுவிடாமல் ஒருவருக்கொருவர் புத்திசொல்லக்கடவோம். எபி 10:25**





எங்கள் முகவரி:

Rev. Dr. J. சாமுவேல் ஜெபராஜ்

பரிசுத்த பர்வதம் ஏ.ஜி சபை, சீயோன் நகர்,
புதுக்கோட்டை, தூத்துக்குடி மாவட்டம் - 628 103,
தமிழ்நாடு, இந்தியா.

www.hmagchurch.in
holymountainag@gmail.com
+91 98421 71014, +91 6369097825
+91 93457 12349


ABOUT US

SCAN ME

To ..............................................................................................

..............................................................................................

..............................................................................................